# 13

# கிறிஸ்துவின் அடிமைகள்

*"இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன் " (ரோமர் 6:22).*

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு நான் கலிஃபோர்னியாவில் உள்ள மொடெஸ்டோ என்ற இடத்தில் சுவிசேஷ பிரசங்கங்களின் தொடர் ஒன்றினைச் செய்யச் சென்றிருந்தேன். எனது மனைவியும் என்னுடன் இருந்தார், கூட்டம் நடந்த காலத்தில் இரு நாட்களுக்கு எங்களை ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தார் தங்கள் இல்லத்தில் சேர்த்துக் கொண்டனர். அவர்கள் என்னையும் சூசனையும் இடவசதி மிகுந்த, பெரிய படுக்கையறை ஒன்றில் தங்க வைத்தனர். அவர்களுடன் நாங்கள் இருந்த இரண்டாம் நாளானது மிகுந்த வேலைப் பளு உள்ளதாயிற்று, ஊழியம் முடியும் வரையிலும் அதாவது அன்றிரவும் பத்து மணி வரையிலும் எனது அன்றாட உடற்பயிற்சிக்கு நேரம் நடை பயின்றபின் வீடு திரும்பத் தாமதமாகி விட்டது. முன் அறையில் ஒரு விளக்கைத் தவிர மற்ற எல்லா விளக்குகளும் அணைந்திருந்தன. எங்களுக்கு உபசாரம் செய்தவரும் அவரது துணை வியாரும் எனக்காகக் கதவைப் பூட்டாமல் வைத்திருந்தனர், நான் முன் கதவு வழியே நழுவிச் சென்று, வீட்டைக் கடந்து அவர்கள் எங்களுக்கு அளித்திருந்த படுக்கையறையை அடைந்தேன். நான் அவ்விதம் சென்ற வழியில், முன்னறையானது ஒரு படுக்கையறையாக மாற்றப் பட்டிருந்ததைக் கவனிக்காமல் செல்ல இயலாதிருந்தது. சோஃபா என்பது ஒரு படுக்கையாக மாற்றப்பட்டிருந்தது, எங்களைக் காத்து இருந்த தம்பதியர் அந்த சோஃபாவில் உறங்கிக் கொண்டிருந்தனர். இந்த இரு கிறிஸ்தவர்களும் உண்மையான ஊழியக்காரர்களாய் இருந்தனர் என்பது தீவிரச் செயல்விளைவுடன் என் சிந்தையில் ஆழப் பதிந்தது. அவர்கள் முன்னறையில் தயார் செய்த படுக்கையொன்றைப் பயன்படுத்துகையில், தாங்கள் கொண்டிருந்த மிகச் சிறந்த படுக்கையறையை எங்களுக்குக் கொடுத்திருந்தனர்! கிறிஸ்தவ அக்கறையில் அவர்கள் எங்களை முதலிடத்திலும் தங்களைக் கடைசி இடத்திலும் வைத்தனர்!

புதிய ஏற்பாட்டின்படி, இந்தத் தம்பதியர் சபையின் ஒரு சிறு சித்தரிப்பாக இருக்க வேண்டும். சபையில் அரசர்களும் அரசிகளும்

இருப்பதில்லை, ஊழியர்களே இருக்கின்றனர்! சபையின் தலைவரான நமது மீட்பர், "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன். அப்படியே, மனுஷ குமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத். 20:27, 28) என்றுரைத்தார். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்குப் பவுல், "ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக் கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையே நோக்குவானாக" (பிலி. 2:3, 4) என்று எழுதியதில் வியப்பேதும் இல்லை. பேதுருவும் கூட கிறிஸ்துவின் சபையாருக்கு "சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும், உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள்" (1 பேது. 2:16) என்று புத்தி கூறினார்.

சபையை நாம், கிறிஸ்துவின் ஊழியக்காரர்களால் ஆன ஒரு சரீரம் என்று கண்ணோக்காத வரையில் கிறிஸ்துவின் அதிகாரப் பூர்வமான சபையினுடைய இயல்பின் திறவுகோல் அம்சத்தை நாம் தவற விட்டு விடுவோம். சபையின் அர்த்தம் மற்றும் வாழ்வு ஆகியவற்றில் ஊழியத்துவக் கருத்தானது பின்னிப் பிணைந்துள்ளது. இந்தச் சிந்தனையானது சபையைத் தோற்றுவித்தவரும் அதன் தலைவருமான கிறிஸ்துவில் தொடங்கி ஒவ்வொரு உறுப்பினருக்கும் கடந்து சென்று அவர்களின் தரத்திற்கான அமைவை ஏற்படுத்துகின்றது. கிறிஸ்துவின் சபை என்று தன்னை உரிமை கோரிக் கொண்டும், உலகில் தன் வாழ்வை தெளிவான, தைரியமான ஊழியத்துவத்தில் கண்ணோக்காத சபை எதுவும் தன்னிடம் இல்லாத ஒன்றையே உரிமைகோருவதாக உள்ளது.

சபையின் மிகவுயர்ந்த இந்த முக்கியத்துவத்தின் காரணமாக, கிறிஸ்துவின் சபையாராகிய நாம் எவ்விதத்தில் கிறிஸ்துவின் ஊழியர்களாய் இருக்கின்றோம் என்பதைக் கவனிக்க வேண்டும்.

## நியமனப் பெயரில்

முதலாவது, நாம் ஊழியர்கள் என்ற வகையில் நமது பணிப் பொறுப்பை நமது நியமனப் பெயரில் காண்கின்றோம். சபையானது கிறிஸ்துவின் ஊழியர்களைக் கொண்டது என்ற கருத்தானது சபையைப் பற்றி விவரமான சொல் விளக்கங்களினால் புதிய ஏற்பாட்டில் சுட்டிக்காட்டப்படுகின்றது. கிறிஸ்து, தம்முடைய மக்கள் ஊழியர்களாய் இருக்க வேண்டும் என்று விரும்பினார் என்பது தெளிவு, இல்லையென்றால் அவர் தம்முடைய சபையைப் பற்றி இவ்விதமாய்ப் பண்புபடுத்தி யிருக்க மாட்டார்.

அவர் தம்மைப் பின்பற்றுபவர்கள் மத்தியில் உண்மையான மாபெரும் தன்மையை ஊழியக்காரரின் சித்தரிப்பு கொண்டு விளக்கப்படுத்தினார்: "புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள்

*என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்து கிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன்" (மத். 20:25, 26). கிறிஸ்துவைப் பொறுத்தமட்டில், மாபெரும் தன்மை என்பது உரிமை யாக்கிய உடமைகள் அல்லது வகிக்கின்ற பதவிகள் ஆகியவற்றின் அடிப் படையில் காணப்படாமல், செய்யப்பட்ட ஊழியத்தின் அடிப்படையி லேயே காணப்படுகின்றது.*

*கிறிஸ்துவுக்கு மனமாற்றத்தில், பாவி ஒருவர் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரர் ஆகின்றதைப் பவுல் சித்தரித்தார். மனமாற்றத்திற்கு முன் நாம் பாவத்திற்கு ஊழியக்காரர்களாய் இருந்தோம், ஆனால் மனமாற்றத்தைத் தொடர்ந்து நாம் நீதிக்கு அடிமைகளாய் இருக்கின்றோம் (ரோமர் 6:17, 18). கிறிஸ்தவர்கள் தங்களுக்கு உரியவர்கள் அல்ல ஆனால் தேவனுடைய தனிப்பட்ட, சொந்த உடமையாய் உள்ளனர்: "கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவை களாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1 கொரி. 6:20). நாம் வாழ்ந்தாலும் மரித்தாலும் கர்த்தருடையவர்களாய் இருக்கின்றோம்: "நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கின்றோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கின்றோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கின்றோம்" (ரோமர் 14:7, 8).*

*தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் நாம் ஊழியக்காரர்களாய் இருத்தல் என்ற கருத்தானது ஒருவருக்கொருவர் நாம் செய்யும் ஊழியத்தில் இயல்பாய்க் காணப்பட வேண்டும். இதன்படியாக, நமக்கு "தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" (எபே. 5:21) என்று கூறப்பட்டுள்ளது, இது நமது சொந்த வழியை வற்புறுத்துவதினால் அல்ல, ஆனால் எப்பொழுதும் நமது சகோதரர்களின் நலத்திலும் ஆவிக்குரிய வாழ்விலும் அக்கறை கொள்ளுவதால் இதைச் செய்ய வேண்டும். பவுல், "போஜனத்தினாலே உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்கினால், நீ அன்பாய் நடக்கிறவனல்ல; அவனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே, கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே ... இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கிகரிக்கப்பட்டவனு மாயிருக்கிறான்" (ரோமர் 14:15, 18). ஆகையால், கிறிஸ்துவின் ஊழியக் காரர்கள் என்ற வகையில் நாம், "சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருக்கும்படியும்" மற்றும் "கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளும்படியும்" (ரோமர் 12:10) கட்டளை பெற்றுள்ளோம். மேலும் நமக்கு, "சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கென்று அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள்" (கலா. 5:13) என்றும் கட்டளையிடப்பட்டுள்ளது.*

*கிறிஸ்துவின் ஊழியர்கள் அவருடைய ஆணைகளை நிறைவேற்று*

வதற்காகவே இவ்வுலகில் இருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய சுவிசேஷத்தையல்ல, அவருடைய சுவிசேஷத்தையே பிரசங்கிக்கின்றனர்; அவர்கள் தாங்கள் திட்டமிட்டுள்ள ஊழியத்தையல்ல, அவருடைய ஊழியத்தையே நிறைவேற்ற நாடுகின்றனர். பவுலுடன் இணைந்து, அவர்கள் "இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால், நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே" (கலா. 1:10) என்று கூறுகின்றார்.

மகா அலெக்சாண்டருடைய படையில் இருந்த ஒரு போர் வீரனைப் பற்றிய கதையொன்று கூறப்படுகின்றது. அந்த இளம் வீரனின் முதற்பெயர் அலெக்சாண்டர் என்றிருந்தது. அவன், அலெக்சாண்டருடைய சக்தி மிக்க படையில் உள்ள வீரனுடைய பண்புக்கு முற்றிலும் புறம்பான தவறைச் செய்து குற்றவாளியானான். அவனது தவறான நடக்கை கண்டு பிடிக்கப்பட்டது, மற்றும் அவன் நியாயம் தீர்ப்பதற்காக அரசனுக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டான். அவனது பெயர் என்னவென்று அலெக்ஸாண்டர் கேட்டார். அந்த வீரன் மென்மையாக/மெதுவாக, ''அலெக்சாண்டர்'' என்று கூறினான். மகா சேனாதிபதி அவனை கடுமையாக, உக்கிரத்தோடு உற்றுப்பார்த்து, ''வீரனே, ஒன்று உனது வாழ்வை மாற்றிக்கொள் அல்லது உன் பெயரை மாற்றிக் கொள்!" என்று கூறினார்.

தேவனுடைய பரிசுத்த ஆவியானவரால் சபைக்கு ஒரு நியமனப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. "நாம் உலகத்தில் எப்படியிருக்க வேண்டுமென்று கிறிஸ்து விரும்பினாரோ, அப்படியாக சபை இருக்க முடிவது எப்படி?" என்ற கேள்விக்கு வேத வசனங்களில் தீர்மானமாகப் பதில் அளிக்கப் பட்டுள்ளது: "உங்களின் நியமனப் பெயருக்கு ஏற்றபடியாக வாழுங்கள்! நீங்கள் எதற்காக அழைக்கப்பட்டீர்களோ, அந்தப்படியாகவே இருங்கள். கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாயிருங்கள்."

வின்ஸ்டன்ட் சர்ச்சில் அவர்கள், ''யாரேனும் ஒருவருக்குள் ஒழுக்கத்தை உண்டாக்குவதற்கான சிறந்த வழி அவருக்கு அவ்வொழுக் கத்தைப் பண்புபடுத்துவதேயாகும்" என்று கூறினார். தேவன் தம்முடைய மக்களுக்கு ஊழியத்துவத்தின் ஒழுக்கத்தை, நமக்குப் பண்புபடுத்து வதினால், நம்மை அவருடைய ஊழியக்காரர்கள் என்று அழைப்பதினால் நமக்குள் செலுத்துகின்றார்.

நாம் ஊழியக்காரர்கள் ஆகும் முன்பு நாம் ஊழியக்காரர்கள் நினைப்பது போலவே நினைக்க வேண்டும் என்பது தெளிவு. நாம் ஊழியக்காரரின் நினைப்பைப் பழக்கப்படுத்திக் கொள்வோம். "இதிலிருந்து எனக்கு என்ன கிடைக்கும்?" என்று நாம் கேட்க வேண்டாம், ஆனால் "எனது சகோதரருக்கு நான் எவ்விதத்தில் உதவியாய் இருக்க முடியும்? அவர் கிறிஸ்துவுக்குள் வளருவதற்கு விசுவாசத்தில் பலம் பெற்றிருப்பதற்கும் எந்த வகையில் அதிகமான உதவி தேவையுள்ளவராயிருக்கின்றார்?" என்று கேட்டுக் கொள்வோமாக. "கர்த்தாவே நீர் சமீபத்தில் எனக்கு என்ன செய்திருக்கின்றீர்?" என்று நாம் கேட்க வேண்டாம், ஆனால் "கர்த்தாவே,

இங்கே (இதோ) நான் இருக்கின்றேன். என்னை அனுப்பும்!'' என்று கேட்போமாக.

## விருப்பத்தில்

நியமனப்பெயரில் நாம் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாய் இருப்பதோடு மட்டுமின்றி, விருப்பத்திலும் அவ்வாறே இருக்கின்றோம். அவருடைய உண்மையான சபைக்கு வேறு எந்த விருப்பமும் கிடையாது. எல்லா வித விருப்பங்களுக்கும் மேலாக, அவருடைய ஜனங்கள் அவருக்கு ஊழியம் செய்யத் தேடுகிறார்கள்.

கிறிஸ்து வருவதற்கு முன், நாம் நம்பிக்கையில்லாதவர்களாக மற்றும் நித்தியத்திற்கும் நம்பிக்கையிழந்தவர்களாகவே இருந்தோம். எந்த மனிதரும் நமக்கு உதவியிருக்க முடியாது. மனிதர்களால் கட்டியெழுப்பப்பட்ட எதுவும் நம்மை இரட்சித்திருக்க முடியாது. எல்லாப் பல்கலைக் கழகங்களிலும், மற்றும் எல்லாக் கல்வி மையங்களிலும் நம்மை மீட்பதற்கு ஒரு வழியைத் திட்டமிட்டு உருவாக்கியிருக்க முடியாது. தெய்வீக இடையிடுதல் என்ற ஒன்றுதான் நாம் பெற்றிருந்த ஒரே வாய்ப்பு நிலையாக இருந்தது.

ஆகையால், தேவன், கிறிஸ்துவை நமது தெய்வீக மீட்பராக இந்த பூமிக்கு அனுப்பினார். அவர் தேவத்துவத்தில் இரண்டாம் நபராயிருப் பினும், முழுமையான மனிதனாக ஆனார். அவர், நித்தியத்தில் தேவன் என்ற தம்முடைய மகிமையுள்ள இடத்தை விட்டு, நமக்காக மரணத்தை ருசி பார்க்கும்படியாக (எபி. 2:9) நம்மில் ஒருவரானார். அவர் தம்முடைய பரலோகத்தின் மேன்மையை சுயநலமற்று பக்கமாய் ஒதுக்கி விட்டு, பூமியின் தாழ்மைப்படுத்தலுக்குள் பிரவேசித்தார். அவர், நாம் யாவரும் துன்புறும் வழிகளில் தாமும் துன்புறுவும், நம் யாவரையும் போலவே மரணத்திற்கு ஆளாகவும் முற்றிலுமாய் மனிதரானார். அவர் நமக்காகத் தமது ஜீவனை பாவ நிவாரணப் பலியாக ஒப்புக் கொடுக்கும் முன்னர், நமக்கு முன்பாக ஒரு முழுமையான வாழ்வைக் காட்சிப்படுத்துவதற்காக இவை எல்லாவற்றையும் செய்தார். தேவனுடைய தெய்வீகக் குமாரன் தம்முடைய பாவமற்ற வாழ்வைக் கிரயம் செலுத்துவதால் மட்டுமே அடைபடக் கூடிய ஒரு கடனை நமது பாவத்தின் குற்றமானது உருவாக்கியிருந்தது.

அவர் ஒரு நிமிடம் கூட இந்தப் பூமியின்மீது செலவழிக்க வேண்டியிருந்ததில்லை, ஆனால் அவர் நம்மீது அன்புகூர்ந்ததாலும், நம்மை மீட்க விரும்பியதாலும், இந்த பூமிக்கு வந்தார். அவர் ஒரு வசதிக் குறைவை அல்லது வேதனையைக் கூடப் பெற வேண்டியிருந்ததில்லை, ஆனால் அவர் நம்மை இரட்சிப்பதற்காக சிலுவையில் அறையப்படுதல் என்ற கற்பனை செய்ய முடியாத வேதனையின் கீழ்ச் சென்றார். அவருடைய பிதா கூட அவரை சிலுவையில் மரிக்கும்படி ஏற்படுத்தவில்லை; அவர் நமக்கு இரட்சிப்பை அளிக்க விரும்பிய காரணத்தால் தாமாகவே அதைச் செய்தார் (யோவா. 10:18). நம்மீது அவர் கொண்ட அன்பானது மறைவான

விருப்பங்களோ, சொந்தமான, சுய நலமான திட்டங்களோ எதையும் கொண்டிருந்ததில்லை. அதில் மாய்மாலமோ, பொய்யான பாவனையோ இல்லை, ஆனால் அது தூய்மையும் உண்மையுமானதாக இருந்தது.

ஆகையால் நாம், வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு இயேசுவுக்குக் கடன்பட்டுள்ளோம். முதலாவதாக, அவரிடத்திலிருந்து நாம் மீட்பைப் பெற்றுக் கொண்டுள்ளோம்: "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே. 1:7); "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று ..." (1 பேது. 1:18, 19) நாம் வாசிக்கிறோம்.

இரண்டாவதாக, அவரிடத்திலிருந்து நாம் ஒரு கொடையைப் பெற்றுள்ளோம். நமது திறமைகளும் உடைமைகளும் அவரிடமிருந்து வந்த விலையேறப்பெற்ற வெகுமதிகளாக உள்ளன. "... உனக்கு உண்டாயிருக் கிறவைகளில் நீ பெற்றுக் கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனா னால் பெற்றுக் கொள்ளாதவன் போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?" (1 கொரி. 4:7).

மூன்றாவதாக, அவர் நமக்கு அடையாளத்தைக் கொடுத்துள்ளார், அவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்டும், மற்றும் அவருடைய கிருபையின் மூலமாக அவரது ஊழியத்திற்காகக் கொடை அளிக்கப்பட்டும் உள்ள நாம், அவருடைய உக்கிராணக்காரர்களாய் இருக்கின்றோம். நாம் முற்றிலுமாக அவருக்கே உரியவர்கள். நாம் பெற்றுள்ள எதையும் நமக்குச் சொந்தமானதென்று நாம் உரிமைகோருவதில்லை. நமது தலைகளில் உள்ள முடியிலிருந்து நமது கால்களின் பாதங்களில் உள்ள விரல்களின் நுனி வரைக்கும், நாம் அவருடைய உடைமையாய் இருக்கின்றோம். அவருக்கு சேவை செய்வதே நமது ஒரே விருப்பமாக உள்ளது. அவர் நமக்குச் செய்துள்ளதற்காக, நாம் இதை வேறு எவ்வழியிலும் கொண்டிருக்க மாட்டோம்.

---

*வாழ்வதற்கு நாம் அழைக்கப்பட்டுள்ள*
*வாழ்வும், நாம் பெற்றுள்ள ஊழியமும், மற்றும்*
*நாம் பிரசங்கிக்கும் செய்தியும்*
*ஊழியத்துவத்தின் ஆவியைப் பிரதிபலிக்க வேண்டும்.*

---

அமெரிக்க உள்நாட்டுப்போருக்குச் சற்று முன்னதாக ஏலத்தில் விடப்பட்ட அடிமைப் பெண்ணைப் பற்றிய கதையொன்று கூறப் படுகின்றது. அவள் தனது பிந்திய இளம் வயதுகளில் இருந்தாள். மற்ற சூழ்நிலைகளின் கீழ், அவள் வாழ்வதற்கான ஒரு வைராக்கியம்

கொண்டவளாகவும், ஒரு மகிழ்வான பயணத்தின்மீது தொடங்கப் பெற்றதென்ற வகையில், எதிர்காலத்தில் புகுந்திருந்தவளாகவும் இருந்திருப் பாள். இருப்பினும், அவள் ஒரு அடிமையாய் இருந்தாள், மற்றும் அவளது ஆன்மாவின் ஏமாற்றமடைந்த பேராவலை அவளது கண்கள் பிரதிபலித்தன. அவளை உரிமையாக்கிக் கொள்வதற்கான விலைகோருதலுக்கு வாய்ப்பொன்றை எதிர்நோக்கிக் காத்திருந்த கூட்டத்தின் மீது அவளது பார்வை பட்டபொழுது, தனக்கு எந்த வகையான எதிர்காலம் இருக்கும் என்று நினைக்கவே மனம் நடுங்கினாள். விரைவிலையே அங்கிருந்த காற்றில், ஏலம் விடுபவரின் விலைகோருதலுக்கான பலத்த குரலானது நிரம்பலாயிற்று. விலைகோருதலானது மேலும் மேலும் உயர்ந்தது. கடைசியில் விலைகோருதல் முடிந்து போய், ஏலம் விடுபவர் மரியாதை நிறைந்த மற்றும் எலும்பைக் குளிரச் செய்யும் முடிவுடன் ''விற்கப் பட்டாயிற்று!'' என்று கூறும் வரைக்கும் கூட்டத்தின் மத்தியில் அமைதி நிலவிற்று. அவ்வார்த்தையானது அந்த இளம் பெண்ணை அவளது பார்வையிலிருந்து அசைத்தது, மற்றும் அவளை ஒரு உடைமையாக உரிமைகோர முன்னால் வந்து கொண்டிருப்பது யார் என்று காண்பதற்காக அவள் கூட்டத்தை நோக்கிப் பார்த்தாள். நடுத்தர வயதுள்ள ஒரு மனிதர் கூட்டத்தைத் தள்ளி விலக்கிக் கொண்டு முன்னால் வந்தார். அவர் அருகில் அடியெடுத்து வைத்து தாம் கோரியிருந்த தொகையைச் செலுத்தினார். பின்பு அவர் திரும்பி அவளை நோக்கி நடந்து வந்தார். தமது கையில் அவளைப் பிடித்துக் கொண்டு, கூட்டத்தை விட்டு விலகி அவளை நடத்தி வந்தார். அவளிடத்தில் ஒரு வார்த்தையும் பேசாமல், ஒரு துண்டுத் தாளை எடுத்து அதில், "இந்தத் தேதியில் நான் உன்னை விலைக்கு வாங்கினேன், மற்றும் நான் உனக்கு உன் விடுதலையை அனுமதித்துள்ளேன்'' என்று எழுதினார். அந்தப் பக்கத்தின் அடியில் அவர் தம் பெயரைக் கையெழுத்திட்டு, பின்பு அந்த விடுதலையின் பத்திரத்தை அந்த இளம் பெண்ணிடம் கையளித்தார். அவள் தனது கரங்கள் நடுங்க, மற்றும் கட்டுப்படுத்த முடியாத உணர்வுடன் அவளது உடல் குலுங்க, அந்தத் தாளைத் தனது மார்புடன் அணைத்துக் கொண்டு, இது கனவல்ல நனவுதானா என்று ஆச்சரியப்பட்டாள். நடந்தது என்ன என்பது முற்றிலும் அமிழ்ந்து புரிந்து கொள்ளுதலுக்குப் பின்பு அவள் அந்த மனிதரின் பாதங்களில் விழுந்து, "ஐயா, நான் மகிழ்வுடன், விருப்பத்துடன் மற்றும் சுயாதீனத்துடன் என்றென்றும் உங்கள் ஊழியக்காரியாய் இருப்பேன்'' என்று கூறினாள்.

இவளது சித்தரிப்பானது சபையின் சித்தரிப்பாகவும் உள்ளது. நாம் பாவத்தின் அடிமைகளாய் இருந்தோம், மற்றும் சாத்தானுடைய தீய தூண்டுதல்கள் மற்றும் விருப்பங்களினால் கட்டுப்படுத்தப்பட்டு, ஆளுகை செய்யப்பட்டு துன்மார்க்கத்தின் அடிமைத்தனத்தினுடைய இழிவான வாழ்வுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் இருந்தோம், ஆனால் இயேசு தம்முடைய இரத்தத்தை விலையாகக் கொடுத்து நம்மை வாங்கி, விடுதலையாக்கினார். இப்பொழுது நாம் அவருக்காக வாழ்கிறோம். நாம் அவரது பாதங்களில் விழுந்து வணங்கி, முடிவில்லா அன்பினாலும் நமக்கு

அவர் செய்துள்ளதை மதிக்கும் நிலையிலும் அவருக்கு நமது பற்றுறுதியை வாக்களித்தோம்.

கிறிஸ்துவுக்கு ஊழியக்காரனாக இருக்க விரும்பாத கிறிஸ்தவர் எவரும் தாம் கிறிஸ்துவுக்குக் கடன்பட்டிருப்பது என்ன என்பதை முற்றிலும் ஆழ்ந்து சிந்தித்திருக்கவில்லை. அவரின்றி நாம் ஒன்றுமற்றவர்களாகி இருப்போம். உங்கள் மனதில் ஒரு பூஜ்யத்தை வரைந்து, அந்தப் பூஜ்யத்தின் துளையை, இந்தப் பூமியைக் காட்டிலும் பெரிதாகும் வரை இழுத்து அகலமாக்குங்கள். அதன்பின் மட்டுமே, கிறிஸ்துவன்றி நாம் எதுபோல் இருப்போம் என்பதை விளக்குகின்ற ஒரு பூஜ்யத்தை நீங்கள் பெறுவீர்கள்! கிறிஸ்து இன்றி நாம் ஒன்றும் இல்லாமையை விடவும் குறைந்தவர்களாய் இருந்தோம்! கிறிஸ்து நமக்காகச் செய்துள்ளவற்றைப் பற்றிய ஒரு புரிந்து கொள்ளுதலானது அன்றாடம் அவருக்கு ஊழியம் செய்வதில் நமது நன்றியை வெளிப்படுத்த நம்மைக் கட்டாயப்படுத்துகின்றது.

## செயல் விளக்கத்தில்

மூன்றாவதாக, கிறிஸ்துவின் சபையாராகிய நாம், செயல் விளக்கத்தில் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகவும் இருக்கின்றோம். நாம் வாழும்படி அழைக்கப்பட்டுள்ள வாழ்வு, நாம் கொண்டுள்ள ஊழியம், மற்றும் நாம் பிரசங்கிக்கும் செய்தி ஆகியவை ஊழியத்துவத்தின் ஆவியைப் பிரதிபலிக்கின்றன.

ஊழியத்துவம் என்பது எப்பொழுதுமே கிறிஸ்தவ வாழ்வின் இருதயம் போன்ற மையப் பகுதியில் உள்ளது. கிறிஸ்தவ வாழ்வு என்பது "கிறிஸ்து நம்முள் இருக்கும்" வாழ்வாக இருக்கும் காரணத்தினால் இது உண்மையாய் உள்ளது, மற்றும் கிறிஸ்து, இந்த உலகம் கண்டவர்களிலேயே மாபெரும் ஊழியக்காரராக இருந்தார். பவுல், ''கிறிஸ்துவுடனே கூடச் சிலுவை யிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்'' (கலா. 2:20) என்று எழுதினார். விஷயம் அப்படியிருக்க, பவுல் ஒரு ஊழியக்காரருடைய வாழ்வை வாழ்ந்தாரென்று காண்பது நம்மைத் திகைப்படையச் செய்யக் கூடாது: அவர் சுய நலமும் தனக்கு ஊழியம் செய்தலுமாய் இராமல், சுயநலமின்மையும் தியாகமும் கொண்டிருந்தார். அவர் நமக்கு, "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது'' (பிலி. 2:5) என்று எழுதினார். நாம் அவருடைய புத்தி கூறுதலைப் பின்பற்றி, கிறிஸ்துவின் சிந்தையுடன் வாழ்வோமென்றால், நாம் மற்றவர்களைப் பற்றி நினைத்து மற்றவர்களுக்காகவே வாழ்வோம்.

> ... அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,

*தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார் (பிலி. 2:6-8).*

கிறிஸ்துவின் சிந்தையானது சுயத்தை வெறுமையாக்கும் சிந்தையாக இருந்தது. அவர் தம்முடைய பரலோக மகிமையைப் புறம்பே வைத்து விட்டு, தம்முடைய சொந்த படைப்பான மனிதர்களுக்கு ஒரு ஊழியக் காரராகி, மனிதரின் இரட்சிப்புக்காக சிலுவையில் அறையப்படுதலுக்குத் தம்மைக் கீழ்ப்படுத்தினார். நாம் அவருடைய சிந்தையுடன் வாழ்வோ மென்றால், மனிதர்களுக்கு ஊழியம் செய்தல் என்பது தவிர வேறேந்தப் பங்கையும் நாம் நிறைவேற்ற முடியாது.

கிறிஸ்து தம்முடைய மக்களுக்குக் கொடுத்துள்ள ஊழியமானது, ஊழியத்துவமின்றி செயல்படுத்தப்பட முடியாது. இயேசு தம்முடைய வரையறைக்குட்பட்ட கட்டளையின் கீழ்த் தம்முடைய சீஷர்களை அனுப்பிய பொழுது, "இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" (மத். 10:8) என்று கூறினார். அவர் தம்முடைய சீஷர்களுக்கு, உலகளாவிய தமது நிறைவுக் கட்டளையைக் கொடுத்த பொழுது, அவர் ஊழியத்துவத்தையே அதிகாரப்படுத்தினார்: "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற். 16:15). அவரது கட்டளை நிறைவேற்றப்பட வேண்டும் என்றால், நம்மில் பலர் போவதற்கும் நாம் மிகவும் அன்பாகப் பற்றிக் கொண்டுள்ள மக்கள், உடைமைகள், மற்றும் கலாச்சாரங்கள் ஆகியவற்றைப் பின்விட்டுச் செல்லு வதற்கும் விருப்பமாய் இருக்க வேண்டும்; நம்மில் எஞ்சியுள்ள மற்றவர்கள், அவ்வாறு செல்பவர்களை அனுப்புவதற்குத் தியாகத்துடன் கொடுப்பவர் களாக, நமக்குச் செலவழித்திருக்கக் கூடிய பணத்தைக் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். செல்கின்றவர்களும், கொடுக்கின்றவர்களும் ஊழியக் காரர்களின் பங்கை நிறைவேற்றுகின்றவர்களாய் இருப்பார்கள். எவரொரு வரும் பணக்காரராக வேண்டும் என்பதற்காக ஊழியக் களத்திற்குச் செல்வதில்லை, மற்றும் எவரொருவரும் பணக்காரராக வேண்டும் என்பதற்காகக் கொடுப்பதில்லை. இவ்விரு சாராருமே தாங்கள் செய்வதை, கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்ற வகையிலேயே செய்கின்றனர்.

நாம் பிரசங்கிக்கின்ற செய்தியானது நம்முடைய சொந்த செய்தியாக இருப்பதில்லை. நாம் கடிதத்தை எழுதியிருக்கவில்லை; நாம் கிறிஸ்து எழுதியுள்ள கடிதத்தை விநியோகம் செய்கின்ற பொது ஊழியர்களாக மட்டுமே இருக்கின்றோம். அவர் அனுப்பிய செய்தியானது திரிக்கப்படாத படியும், தெளிவற்றுப் போகாதபடியும் நாம் அதைக் காத்துக் கொள்ள வேண்டும். அதை மறுபடியும் மாற்றி எழுதுவதற்கு நமது அரசரிடமிருந்து கட்டளைகளை நாம் பெற்றிருக்கவில்லை; அது மிகச் சரியாக விநியோகிக் கப்படும்படி பார்த்துக் கொள்ளும்படி மட்டும் நாம் கட்டளையிடப் பட்டுள்ளோம். இந்தச் செய்தியின்றி இவ்வுலகமானது இழந்துபோகப் பட்டுள்ளது என்று நாம் அறிகின்றோம். ஆகையால், பரிவிரக்கம் மற்றும்

அன்பிரக்கம் ஆகியவற்றினால், சாத்தியப்படும் ஒவ்வொரு வழிமுறையிலும் அச்சிட்ட பக்கம், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாக, பிரசங்க மேடைகளில் இருந்து, தனிப்பட்ட தொடர்புகள் மூலமாக, மற்றும் அன்றாட வாழ்வில் நாம் அவருடைய செய்தியை உயர்த்திப் பிடிக்கின்றோம். நாம் அவரது செய்தியை முதலாவது இடத்தில் வைக்கின்றோம் நமது சொந்த வசதிகள் மற்றும் கனவுகள் ஆகியவற்றிற்கும் கூட மேலானதாக வைக்கின்றோம். அதன் பிரசங்கித்தலுக்காக, நாம் நமது திறமைகளை, நமது பணத்தை, நமது நேரத்தை, நமது சிந்தைகளை, நமது கரங்களை, நமது பாதங்களை, ஆம் நமது இருதயங்களையே கூட அளிக்கின்றோம்.

நமது அரசர் மற்ற எல்லா அரசர்களிலும் இருந்து மாறுபட்டவராய் இருக்கின்றார்! அவர் அரசர்களுக்கெல்லாம் அரசராக, அண்டம் அனைத்தையும் படைத்து பராமரிப்பவராக இருந்தாலும், அவர் ஒரு ஊழியக்காரராகவே நம்மிடைய வாழ்ந்தார். இந்த சத்தியமானது, கடைசி இராப்போஜனத்தின் போது இயேசு தம்முடைய சீஷர்களின் பாதங்களைக் கழுவிய நிகழ்ச்சியின் மூலமாக விசேஷித்த வகையில் பளிச்சிடுகின்றது (யோவா. 13:1-16). பூமிக்குரிய அரசர் ஒருவர் நம்மிடையே வரும் பொழுது, மக்கள் அவருக்கு முன்னாக விழுந்து வணங்கி, அவரைத் தொட்டுப் பார்க்க நாடுகின்றனர். போப் தனது மக்கள் மத்தியில் வரும் பொழுது, அவர்கள் அவருக்கு முன்பாக விழுந்து வணங்கி, அவரது கையை முத்தம் செய்ய நாடுகின்றனர். இருப்பினும், கிறிஸ்து தம்முடைய மரணத்திற்கு முதல் நாள் இரவில் தம்முடைய சீஷர்களுடன் இருந்தபொழுது, அவர் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி, அவர்களின் பாதங்களைக் கழுவினார்.

அவர் ஏன் இதைச் செய்தார்? அவர் இதைச் செய்ய வேண்டியிருந்தது என்பதற்காகவோ அல்லது இதைச் செய்ய வேறொருவரும் இல்லை என்பதற்காகவோ அல்ல. ஒரு விளக்கமானது தம்முடைய சீஷர்களுக்கு மதிப்புமிக்கதாயிருக்கும் என்று அவர் அறிந்திருந்ததால் மட்டும் இதைச் செய்யவில்லை. அவர் தாம் யாராக இருக்கின்றாரோ அதாவது அவர் தேவனுடைய குமாரனாகவும் மனிதர்களுக்கு ஊழியக்காரராகவும் இருக்கின்ற அந்த காரணத்தினாலேயே இதைச் செய்தார். அவர் ஒரு ஊழியராக வந்தார், ஒரு ஊழியராக வாழ்ந்தார் மற்றும் ஒரு ஊழியராகவே மரித்தார். நடப்பதைப் போல் அல்லது உண்பதைப் போல், மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதென்பது அவருக்கு சாதாரணமாகவே இருந்தது. மற்றவர்களுக்கு நாம் யாராயிருக்கின்றோமோ, அந்தக் காரணத்தினால், அவர் தம்மைப் பின்பற்றுபவர்களை அதே வகையான வாழ்வுக்கு அழைக்கின்றார்:

> நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக் கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே

*மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல (யோவா. 13:13-16).*

இயேசு நடந்தது போலவே நாம் நடக்க வேண்டியுள்ளது. மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதில் நமது சிந்தனைகளை மையப்படுத்தாமல் நாம் உண்மையான கிறிஸ்தவ வாழ்வில் ஈடுபட முடியாதென்று கூறுமளவுக்கு ஊழியத்துவமானது கிறிஸ்தவரின் வாழ்விலும், ஊழியத்திலும் மற்றும் செய்தியிலும் பின்னிப் பிணைந்துள்ளது.

நீங்கள் ஒரு ஊழியக்காரரின் வாழ்வை எவ்விதம் வாழ முடியும் என்று வியப்படைந்தால், கிறிஸ்து உங்களை என்ன செய்யும்படி கேட்டுக் கொண்டாரோ, அதை மாத்திரம் செய்யுங்கள். ஒரு ஊழியக்காரராய் இராமல், நீங்கள் அவருடைய சித்தத்தைச் செய்ய முடியாது என்று காண்பீர்கள். நீங்கள் ஒரு ஊழியக்காரராக இருந்தாலன்றி அவர் உங்களிடத்தில் கேட்டுக் கொண்டபடியாக அவரது சுவிசேஷத்தை நீங்கள் மற்றவர்களுக்குப் போதிக்க முடியாது; நீங்கள் ஒரு ஊழியக்காரராக இராமல், அவர் உங்களுக்குக் கூறியபடி ஏழைகள் மீது அக்கறையாய் இருக்க முடியாது; ஒரு ஊழியக்காரரின் இருதயத்தைக் கொண்டிராமல் நீங்கள் அவர் உங்களுக்குக் கொடுத்த ஊழியத்தை நிறைவேற்ற முடியாது.

## முடிவுரை

சபையானது கிறிஸ்துவின் ஊழியக்காரர்களால் உருவானது என்பதைப் புதிய ஏற்பாடானது தெளிவு படுத்துகின்றது. நாம் நியமனப் பெயரிலும், விருப்பத்திலும் மற்றும் செயல்விளக்கத்திலும் ஊழியக்காரர்களாய் இருக்கின்றோம். சிலுவையின் அடியில் உள்ள தரையானது சமமான பரப்புடையதாக உள்ளது. எந்த ஒரு ஊழியரும் மற்றவர்களுக்கு மேலாக உயர்த்தப்படுவதில்லை, மற்றும் எந்த ஒரு ஊழியரும் மற்றவர்களுக்குக் கீழாகத் தாழ்த்தப்படுவதில்லை. நாம் யாவரும் ஊழியர்களாக மட்டுமே இருக்கின்றோம்.

குளோவிஸ் சேப்பல் அவர்கள், ஒரு கப்பலில் தாம் பெருங் கடலைக் கடந்ததைப்பற்றிக் கூறினார். இது அவர் மேற் கொண்ட இவ்வகைப் பயணங்களில் முதலாவதாக இருந்தது, மற்றும் அந்தப்பயணமானது அவரால் சகிக்க முடியாததாக இருந்தது. அவர் நிற்பதே அரிதாகுமளவுக்கு, கப்பல் இயக்கத்தால் ஏற்படும் குமட்டல் நோய்க்கு ஆளானார். மேல் உள்ள துயிலறையே அவர் தூங்கும் இடமாயிருந்தது, அது மேற்பகுதியில் இருந்த துயிலறையானதால் அவரால் தாங்க முடியாமல் போயிற்று. தாம் மரிக்கப் போவதாகத் தாம் நினைத்ததாக அவர் கூறினார். அவருக்கு நேர் கீழுள்ள துயிலறையில் இருந்த மனிதர் இவருக்கு முற்றிலும் அந்நியராய் இருந்தார், அவர் இவரது நோயின் தன்மையை அறிந்தவராக, மூச்சு விடுதல் போன்ற இயல்பான பரிவிரக்கத்துடன், துயிலறைகளை மாற்றிக் கொள்ளலாம் என்று ஆலோசனை தெரிவித்தார். பின்பு அவர் இவருக்கு, ஒரு மருத்துவத் தாதி நோயாளிக்குச் செய்வது போல உதவி செய்யத் தொடங்கினார்.

சேப்பலிடம் இருந்து எந்த ஒரு வேண்டுகோளும் இல்லாத நிலையிலேயே, மென்மையான அக்கறையுடன் இவரது தேவைகளைக் கவனிக்க அவர் விரைந்தார். ஊழியத்துவம் என்பது அவருக்கு வாழ்வின் ஒரு வழிமுறையாக இருந்த காரணத்தினால், அந்த மனிதரைப் பல ஆண்டுகள் தாம் நினைவில் வைத்திருந்ததாகத் திருவாளர். சேப்பல் அவர்கள் கூறினார். அந்த மனிதர் ஒரு ஊழியன் சிந்திக்கின்ற வகையிலேயே சிந்தித்திருக்க வேண்டும், மற்றும் இவ்விதமாகவே அம்மனிதர் தாம் வீட்டிலோ அல்லது வெளியிலோ, எங்கிருந்தாலும் ஒரு ஊழியக்காரராகவே வாழ்ந்தார்.

கிறிஸ்துவைப் பின்பற்றுகின்றவர்கள் தங்கள் தலைமுடியை சீவிக் கொள்வது போலவோ அல்லது நடப்பது போலவோ இயல்பானதாக, ஒரு டம்ளர் நீர் அருந்துவது அல்லது உணவு உண்பது போலவோ இயல்பான தாக ஊழியர்களாய் இருப்பதைப் போல தங்களைக் காண வேண்டும். நமது வாழ்வானது சுயமையப்படுத்துதலில் இருந்து குமாரனை மையப்படுத்து தலுக்கு மாற்றப்பட்டுள்ளது, மற்றும் இது ஒன்றே ஒன்றை - ஊழியத்துவம் என்பதை மட்டுமே அர்த்தப்படுத்த முடியும்.

கிறிஸ்துவின் அழைப்பானது எப்பொழுதுமே பாவிகளை இரட்சிப்புக் குள்ளும் ஊழியத்துவத்திற்குள்ளும் வருமாறு அழைப்பதாகவே உள்ளது. அவர் நம்மிடத்தில் “வா” என்றும் (மத். 11:28, 29) மற்றும் “போ” (மத். 28:19, 20) என்றும் கூறுகின்றார். வருகின்ற எவரையும் அவர் ஏற்றுக் கொள்வார், ஆனால் அவர் வரும் பொழுது எவரொருவரையும் அவர் இருக்கின்ற நிலையில் விட்டு வைக்கமாட்டார். அவர் நம்மைப் பாவிகள் என்ற வகையில் ஏற்றுக் கொள்கின்றார், ஆனால் நம்மை மனிதர்களுக்கு ஊழியக்காரர்களாக அவர் மாற்றுகின்றார். ஆகையால் அவருடைய உண்மையான சபையானது ஊழியரின் ஊழியக்காரர்களால் ஆனதாக உள்ளது.

நீங்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரராக இருக்கின்றீர்களா?

## படிப்பு மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. “ஊழியக்காரர்” என்பதைச் சுருக்கமாக விளக்கவும்.
2. ‘‘நாம் சுயாதீனராயினும் கிறிஸ்துவின் அடிமைகளாய் இருக்கின்றோம்’’ என்ற கூற்றினைப் பற்றி கலந்துரையாடவும்.
3. கிறிஸ்துவைப் பொறுத்தமட்டில் ஊழியத்துவமானது எவ்விதத்தில் மாபெரும் தன்மைக்கு வழி நடத்துகிறது என்று விளக்கப் படுத்தவும் (மத். 20: 25, 26).
4. ‘‘நீதிக்கு ஊழியக்காரராய்’’ இருத்தல் என்பது எதனை அர்த்தப் படுத்துகின்றது?
5. நாம் ஏன் கிறிஸ்துவுக்கு உரியவர்களாய் இருக்கின்றோம்?

6. தேவ பயத்தோடே ஒருவருக்கொருவர் "கீழ்ப்படிந்திருத்தல்" என்பது எதனை அர்த்தப்படுத்துகின்றது?
7. உணவினால் ஒருவர் தம் சகோதரரை எவ்விதத்தில் கெடுக்க முடியும்?
8. "சகோதர சிநேகத்துடனே ஒருவருக்கொருவர் பட்சமாயிருத்தல்" என்பது எதனை அர்த்தப்படுத்துகின்றது?
9. சபையானது ஏன் கிறிஸ்துவின் ஊழியர்களாய் இருக்கும்படி விரும்ப வேண்டும்?
10. கிறிஸ்துவுக்கு நாம் எந்த மூன்று வழிகளில் கடன் பட்டிருக்கின்றோம்?
11. "கிறிஸ்து நமக்குள் இருக்கும்" வாழ்வு என்ற வகையில் கிறிஸ்தவ வாழ்வை விளக்கப்படுத்தவும்.
12. சுயத்தை வெறுமையாக்கும் சிந்தை என்றால் என்ன?
13. ஊழியத்துவம் இல்லாமல் கிறிஸ்து நமக்குக் கொடுத்த ஊழியத்தை நம்மால் செயல்படுத்தப்பட முடியுமா?
14. கிறிஸ்து தம்முடைய சீஷர்களின் பாதங்களைக் கழுவியதன் மூலம் எதைப் போதிக்க நாடினார்?
15. "சிலுவையின் அடியில் உள்ள தரையானது சமதளப் பரப்புடையதாக இருக்கின்றது" என்ற வாக்கிய விளக்கம் அர்த்தப் படுத்துவது என்ன?